# திருப்பூர் மாநகராட்சி

**2020 ஆகஸ்டு மாதம் 18-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1100 முதல்1102 வரை**

**25-08-2020-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1103 முதல் 1104 வரை**

**28-08-2020-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1105 முதல் 1116 வரை**

# திருப்பூர் மாநகராட்சி

**2020ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**1100)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் இல்லாத பகுதிகள் (Water unserved area) குடிசை பகுதிகள், பள்ளிகள், சத்துணவு மையங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் மற்றும் குடிநீர் பகிர்மானத்தில் சீரான நீரழுத்தம் இல்லாத பகுதிகள் மற்றும் மாநகராட்சியின் நான்கு மண்டலங்களில் குடிநீர் பகிர்மானத்தில் மின்தடைகளினால் அவ்வப்போது பற்றாக்குறை ஏற்படும் பகுதிகளுக்கு குடிநீர் லாரிகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. மாநகராட்சியில் குடிநீர் லாரிகள் போதிய அளவில் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் 9 தனியார் வாகனங்களை அமர்த்தி குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 31-07-2020ம் தேதியன்று கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப உறையினை கூர்ந்தாய்வு செய்ததில் பிரிக்கப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி உள்ளது என கூர்ந்தாய்வு குழுவினரால் 31-07-2020 ஆம் தேதியன்று தீர்மானிக்கப்பட்டது. எனவே Price bid ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் 2வது உறை 03-08-2020ம் தேதியன்று திறக்கப்பட்டது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி | லாரி ஒன்றிற்கு நடை ஒன்றிற்கு 5000 லிட்டர் கொள்ளளவு |
|---|---|---|
| 1. | திரு.எம். அப்புசாமி<br>15, குறிஞ்சி நகர் விரிவு, திருப்பூர்-4. | ரூ.591/- |
| 2. | திரு.டி.எஸ்.சிவக்குமார்,<br>42, கந்தசாமி வீதி, திருப்பூர் | ரூ.689/- |
| 3. | திரு.வி.கோபாலகிருஷ்ணன்,<br>கவுண்டம்பாளையம், திருப்பூர் | ரூ.680/- |

மேற்காண் ஒப்பந்தப்புள்ளியில் 03-08-2020ம் தேதியன்று திறக்கப்பட்ட இரண்டாவது (Price bid) உறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எம்.அப்புசாமி அவர்களின் ரூ.591/- நடை ஒன்றிற்கு குறிப்பிட்டுள்ள விலைவிகிதம் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. விபரம் மாமன்றத்தின் பரிசீலனைக்கும் மற்றும் முடிவிற்கும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) எனவே மேற்காண் குடிநீர் பணி அத்தியாவசிய அவசர அவசியம் கருதி குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்க குடிநீர் விநியோகக் குழாய் இல்லாத பகுதிகளில் சீராக குடிநீர் விநியோகித்து சட்ட ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படாமல் தவிர்க்க மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காண் செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ.1 / 3778 / 2020)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1101)** திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் -3 , வார்டு எண்.31-க்குட்பட்ட சடையப்பன் கோவில் வீதி பகுதியில் சமுதாயக் கூடம் கட்டுதல் பணிக்கு திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2020 -21-ல் ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் மேற்காணும் பணிக்கு மதிப்பீடு மற்றும் தலஆய்வு சான்று அறிக்கையுடன் நிர்வாக அனுமதி கோரும் கருத்துருவினை அனுப்பி வைக்குமாறு இணை இணக்குநர் / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2887 / 2020/ அ.6, நாள் 17-08-2020-ல் கோரியுள்ளார். எனவே சடையப்பன் கோவில் வீதியில் வார்டு "J " , பிளாக் 34, T.S.No.48 - பகுதியில், ஏற்கனவே இயங்கி வந்த பிரேமா பள்ளி, தற்போது மாநகராட்சியால் அப்புறப்படுத்தப்பட்டு காலியாக உள்ள இடத்தில் சமுதாயக் கூட கட்டுமானப் பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு ரூ.100.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. சமுதாயக் கூடம் கட்டுதல் பணிக்கு திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.50.00 இலட்சம் போக மீதித் தொகையான ரூ.50.00 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 4524 / 2020 / ம.3)

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1102)** திருப்பூர் மாநகராட்சியில் அம்ரூத் 2017- 20 ஆம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் திருப்பூர் தெற்கு வட்டம், திருப்பூர் டவுன்கிராமம், தாராபுரம் சாலை, கல்யாணி பெட்ரோல் பங்க், வார்டு - N, பிளாக் எண் - 1, நகரளவு எண் - 30-ல் நெடுஞ்சாலைக்கு கட்டப்பட்ட மேற்படி இடத்தில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டும் பணிக்கு இடையூறாக உள்ள கீழ்க்கண்ட 18 மரங்கள் விபரம் பின்வருமாறு.

1) வேம்பு மரம் **-1** 2) வாகை மரம் **-1** 3) பீயன் மரம் **-2** மற்றும் 4) அசோக மரம் **-14**

எனவே மேற்படி மரங்களை பொது ஏலத்தில் விட்டு வெட்டி அப்புறப்படுத்தவும், வெட்டப்படும் மரங்களுக்கு ஈடாக இருமடங்கு மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ள வருவாய் கோட்டாட்சியர், திருப்பூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1901 / 2020 / அ.3, நாள் 07-08-2020 அனுமதி கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்காண் கடிதத்தில் மரம் வெட்டிக் கொள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கியுள்ளதால் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி தொடரப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( இ.1 / 4814 / 2017)

- - - - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.

**திருப்பூர் மாநகராட்சி**

**2020ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**1103)** திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உருவாகும் மொத்த கழிவுகளை தமது சொந்த பொறுப்பில் மொத்த உற்பத்தியாளர்களிடமிருந்து ( Bulk Waste Generator) உருவாகும் கழிவுகளை சேகரித்து மேலாண்மை செய்யவும் மற்றும் மண்டலம் 1 வார்டு எண்.9-ல் உள்ள சாந்தி தியேட்டர் எதிரில் உள்ள நுண் உரமாக்குதல் மையத்தினை பராமரிக்கவும் M/s. CARBON DYNAMICS X FOUNDATION, No.1, Bridgeway Colony Extension North. Tiruppur - 641 607 என்ற நிறுவனத்தின் மூலம் செயல்படுத்த 24-07-2020ம் தேதியில் கடிதம் அளித்துள்ளார்கள்.

அதன் அடிப்படையில் மொத்த கழிவுகளை உற்பத்தியாளர்களிடமிருந்து சேகரிக்கவும், அவற்றை மேலாண்மை செய்யவும் மற்றும் மண்டலம்-1,வார்டு எண்.9-ல் உள்ள சாந்தி தியேட்டர் எதிரில் உள்ள நுண்உரமாக்கும் மையத்தினை பராமரிக்கவும் திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008, திடக்கழிவு மேலாண்மை விதி 2016, தமிழக அரசு விதிமுறைகள் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளை முழுமையாக பின்பற்றி நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் மேற்படி பணியின் செயல்பாட்டிற்கு மாநகராட்சியிலிருந்து எவ்வித தொகையும் வழங்க இயலாது என்பதையும் தெரிவித்து, M/s. CARBON DYNAMICS X FOUNDATION, No.1, Bridgeway Colony Extension North. Tiruppur - 7 என்ற நிறுவனத்தாருக்கு பணிஉத்திரவு வழங்கும் நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு பணிகளை மேற்கொள்ள அனுமதித்தும், இப்பணியினை சிறந்த முறையில் மேற்கொள்ளும் பட்சத்தில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கு ஒரு முறை பணி நீட்டிப்பு உத்திரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதி வழங்கலாம். (எச்.1 / 2754 / 2020)

------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

-------

**1104)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.16913/பி3 / 2019 சென்னை- 28 அவர்களின் கடிதத்தில் M/s. Nothing is waste என்ற நிறுவனத்திற்கு திருப்பூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் சேகரிக்கப்படும் மறு சுழற்சி / விற்பனை செய்ய இயலாத, மக்காத எரியும் தன்மையுடைய கழிவுகளை விஞ்ஞான பூர்வமான முறையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு விதிமுறைகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி அனைத்து நடைமுறைகளையும் முழுமையாக பின்பற்றி பாதுகாப்பான முறையில் எரிக்க (Incineration Process) கழிவுகளை இலவசமாக வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இவ்வலுவலக உத்திரவு ந.க.எண்.எச்.1 /1654 / 2019 நாள் 08-03-2019ன்படி ஆறு மாத காலங்களுக்கு மேற்கண்ட கழிவுகளை மாதம் ஒன்றுக்கு 50 மெட்ரிக் டன் அளவிற்கு பேலிங் செய்த கட்டுக்களாக இம்மாநகராட்சியினால் குறிப்பிடும் இடத்திலிருந்து தங்களது சொந்த பொறுப்பில் எடுத்துச் சென்று பாதுகாப்பான

<u>**1104-ன் தொடர்ச்சி**</u>

முறையில் (Disposal) அழித்து மேலாண்மை செய்ய வேண்டும் என தெரிவித்து M/s.Nothing is waste என்ற நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கப்பட்டது.

மேலும் மேற்படி அனுமதி வழங்கப்பட்ட காலம் முடிவடைந்துவிட்டதால் மேற்படி பணி திருப்திகரமாக மேற்கொள்ளும் பட்சத்தில் மேலும் இரண்டு ஆண்டு காலத்திற்கு, ஆண்டிற்கு ஒரு முறை பணி உத்திரவினை நீட்டிப்பு செய்யும் வகையில் கடந்த 08-05-2020ந் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு மேற்படி கழிவுகளை மாதம் ஒன்றுக்கு 100 மெட்ரிக் டன் அளவிற்கு வழங்க இவ்வலுவலக உத்திரவு ந.க.எண்.எச்.1/ 1654 / 2019 நாள் 08-05-2020ல் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதற்கும் மற்றும் 08-03-2019ந் தேதியில் ஏற்கனவே வழங்கப்பட்ட உத்திரவிற்கும் பின்னேற்பு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

M/s.Nothing is waste என்ற நிறுவனத்திற்கு மேற்கண்டவாறு பணி மேற்கொள்ள வழங்கப்பட்ட உத்திரவுகளுக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

( எச்.1 / 1654 / 2020)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.

## திருப்பூர் மாநகராட்சி

**2020ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**1105)** திருப்பூர் மாநகராட்சி,மண்டலம் எண்.3, நல்லூர் கிராமம்- சர்வே எண்கள் 108/4A, 6B, 7 மற்றும் 108 / 8-ல் அமையும் 5.69 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திட்ட அனுமதி கோரி திரு.S. தங்கராஜன், த/பெ. சுப்புக்கவுண்டர், 121B-பதி நகர், சேலம் ரோடு, நாமக்கல் அவர்கள் விண்ணபித்துள்ளார்.

உத்தேச மனைப்பிரிவிற்கு அனுமதி கோரும் விண்ணப்பத்தினை பரிசீலித்து நகர் ஊரமைப்பு இயக்குநர், 807 அண்ணா சாலை, சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 308 / 2019 / எல்.ஏ.2 நாள் 13-12-2019-ல் மனைப்பிரிவில் அமையும் திருத்திய சாலை அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் அனுப்பப்பட்டுள்ளது.

சாலை அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்திற்கேற்ப, மனுதாரர் மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம், குடிநீர்ப் பிரதானக் குழாய் ஆகிய இதர அடிப்படை வசதிகளை மாநகராட்சியால் பின்பற்றப்படும் தரத்தில் அமைத்துள்ளார். மேலும் 27 மின்கம்பங்கள் அமைக்க ரூ.25,000/- வீதம் ரூ.6,75,000/-ம் ஏக்கர் ஒன்றிற்கு ரூ.5,000/- வீதம் ரூ.28,450/-ஐயும் மாநகராட்சி கருவூலத்தில் 16-06-2020, 12-06-2020 மற்றும் 13-08-2020 தேதியன்று செலுத்துச்சீட்டு எண்.032 / 5 /20-21 /0000525, 032 / 501/5/20 - 21/ 0000456 & 032/501/5/20-21/ 00001808-ல் செலுத்தி உள்ளார். மேலும் பூங்காவின் எல்லைகளில் கம்பி வேலி அமைத்து, பெயர் பலகையும் நிறுவப்பட்டுள்ளது.

எனவே நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சாலை அமைப்பு ஒப்புதல் வரைபடத்தின்படி, அமைக்கப்பட்ட மனைப்பிரிவு சாலை மற்றும் பூங்கா இடங்களை பத்திர பதிவு எண்.2600 / 2020 நாள் 26-08-2020-ல் ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி என்ற பெயரில், சார்பதிவாளர் நல்லூர் அலுவலகத்தில் தானமாக பதியப்பட்டுள்ளது. எனவே தான ஆவணப் பத்திரத்தின்படி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலை மற்றும் பூங்கா இடங்களை மாமன்றத்தின் பராமரிப்புக்கு ஏற்றுக் கொள்வது குறித்தும், நகர் ஊரமைப்பு இயக்குநரால் அளிக்கப்படும் இறுதி ஒப்புதலின்படி உத்தேச மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்குவது குறித்தும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் (இ.1 / 2626 / 2018 / ம 3)

------

### தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.

-------

**1106)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் பகுதி வாரியாக மேம்படுத்துவதற்கு தேர்வுசெய்யப்பட்ட (ABD Area) பகுதியில் ரூ.88.12 கோடி ( Phase-I ) திட்ட மதிப்பீட்டில் மிடுக்கான சாலைகள் பணி மேற்கொள்ள ( TUFIDCO) நிறுவனத்தால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மேற்படி பணி 12 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு சிப்பம் 10-ல் வார்டு எண்-45ல். பழைய மார்க்கெட் சாலை, சிவசுப்பிரமணியம் வீதி மற்றும் ஈஸ்வரன் கோவில் வீதிகளில் ஸ்மார்ட் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ள தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண் .25477/2017/DO1

**1106-ன் தொடர்ச்சி**

நாள் 18-11-2019 ( E.R.No.417 / 2019-20) வாயிலாக ரூ. 570.20 இலட்சம் மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு இரண்டாம் அழைப்பில் இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி மேற்படி பணிக்கு 07-07-2020 அன்று திருவாளர்கள் **Sri Surya Construction, Erode, GMS Elegant Builders India Private Limited, Erode, Chitravarshini and Co., Coimbatore** மற்றும் திருவாளர்கள் **R.K.Builders, Coimbatore** ஆகிய நான்கு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன

மேற்கண்ட நான்கு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிக்கான உறை திறப்பு செய்யப்பட்டு மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டது அதனடிப்படையில் மேற்கண்ட நான்கு நிறுவனங்களில் திருவாளர்கள் **Sri Surya Construction, Erode, GMS Elegant Builders India Private Limited, Erode, Chitravarshini and Co., Coimbatore** ஆகிய மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதிவாய்ந்ததாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இம்மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் உறை 21-08-2020 அன்று திறப்பு செய்யப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எ.ண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. (GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் Chitravarshini and Co., Coimbatore | 5,95,52,976/- | 9.98% | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | திருவாளர்கள் Sri Surya Construction, Erode, | 6,08,03,111/- | 12.29% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 3. | திருவாளர்கள் GMS Elegant Builders India Private Limited, Erode, | 6,24,06,140/- | 15.25% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி மூன்று நிறுவனத்தாரில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த திருவாளர்கள். Chitravarshini and Co., Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையை விட 9.98% அதிகமாக இருந்ததால் மேற்படி நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். TSCL / E1 / 6630(I) / 2017 நாள் 21-08-2020 வாயிலாக விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் 24-08-2020 தேதிய விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எ.ண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. (GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் Chitravarshini and Co., Coimbatore | 5,95,47,741/- | 9.97% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 9.97% அதிகமாக இருந்ததால் இரண்டாம் முறையாக மீண்டும் மேற்படி நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். TSCL / E1 / 6630 (I) /2017 நாள் 24-08-2020 வாயிலாக விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது.

மேற்படி நிறுவனத்தின் 25-08-2020ம் தேதிய விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எ.ண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. (GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் Chitravarshini and Co., Coimbatore | 5,95,22,095/- | 9.93% அதிகம் |

**1106-ன் தொடர்ச்சி**

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 9.93% அதிகமாக இருந்ததால் மூன்றாம் முறையாக மீண்டும் மேற்படி நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண்.TSCL/E1/6630(I)2017 நாள் 25-08-2020 வாயிலாக விலைக்குறைப்பு செய்துதர கோரப்பட்டது.

மேற்படி நிறுவனத்தார் 27-08-2020 தேதிய கடிதத்தில் கட்டுமானப் பொருள்கள், தொழிலாளர்கள் கூலி மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் சந்தை விலையானது மதிப்பீட்டு விலைகளை விட அதிகமாக இருப்பதனால் மேற்கொண்டு விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள்.

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 9.93% அதிகமாக உள்ள திருவாளர்கள் Chitravarshini and Co., Coimbatoreஅவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவின் ( Tender Award Committee) முடிவிற்கு பரிந்துரைக்கலாம். மேலும் இவ்வினத்தில் மதிப்பீட்டை விட கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சியின் நிதிநிலைமை ஏற்கக் கூடியதாக இல்லை என்பதால் இத்தொகையை வேறு அரசு மான்யங்களிலிருந்து ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கோர மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். (TSCL/E1 /6630 (I) / 2017)

------

## தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.

-------

**1107)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் பகுதி வாரியாக மேம்படுத்துவதற்கு தேர்வுசெய்யப்பட்ட (ABD Area) பகுதியில் ரூ.88.12 கோடி ( Phase-I ) திட்ட மதிப்பீட்டில் மிடுக்கான சாலைகள் பணி மேற்கொள்ள ( TUFIDCO) நிறுவனத்தால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி 12 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு சிப்பம் 11-ல் வார்டு எண்.46-ல் ராயபுரம் பிரதான சாலை, நேரு வீதி சூசையாபுரம் பொதுக் கழிப்பிடம் வரை பணி மேற்கொள்ள தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 25477/2017/DO1 நாள் 18-11-2019 ( E.R.No.418 / 2019-20) வாயிலாக ரூ.929.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு இரண்டாம் அழைப்பில் இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி மேற்படி பணிக்கு 07-07-2020 அன்று திருவாளர்கள் **Sri Surya Construction, Erode,** மற்றும் **GMS Elegant Builders India Private Limited, Erode,** ஆகிய இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிக்கான உறை திறப்பு செய்யப்பட்டு மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டது. அதனடிப்படையில் மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதிவாய்ந்ததாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இவ்விரு நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் உறை 31-07-2020 அன்று திறப்பு செய்யப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. (GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் Sri Surya Construction, Erode, | 10,08,77,519/- | 13.27% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | திருவாளர்கள் GMS Elegant Builders India Private Limited, Erode, | 10,22,94,666/- | 14.86% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

<u>1107-ன் தொடர்ச்சி</u>

மேற்படி இரண்டு நிறுவனத்தாரில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த திருவாளர்கள். Sri Surya Construction, Erode, அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையை விட 13.27% அதிகமாக இருந்ததால் மேற்படி நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். TSCL / E1 / 6630(I) / 2017 நாள் 03-08-2020 வாயிலாக விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் 05-08-2020 தேதிய விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எ.ண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. (GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் Sri Surya Construction, Erode, | 9,79,34,831/- | 9.96% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 9.96% அதிகமாக இருந்ததால் இரண்டாம் மற்றும் மூன்றாம் முறையாக மீண்டும் மேற்படி நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதங்கள் எண். TSCL / E1 / 6630 (I) 2017 நாள் 06-08-2020 மற்றும் 10-08-2020 வாயிலாக விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது.

மேற்படி நிறுவனத்தார் 07-08-2020 மற்றும் 12-08-2020 தேதிய கடிதங்களில் கட்டுமானப் பொருள்கள், தொழிலாளர்கள் கூலி மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் சந்தை விலையானது மதிப்பீட்டு விலைகளை விட அதிகமாக இருப்பதனால் மேற்கொண்டு விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள்.

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 9.96% அதிகமாக உள்ள திருவாளர்கள் Sri Surya Construction, Erode, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவின் ( Tender Award Committee) முடிவிற்கு பரிந்துரைக்கலாம். மேலும் இவ்வினத்தில் மதிப்பீட்டை விட கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சியின் நிதிநிலைமை ஏற்கக் கூடியதாக இல்லை என்பதால் இத்தொகையை வேறு அரசு மான்யங்களிலிருந்து ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கோர மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். (TSCL/E1 /6630 (I) / 2017)

------

## தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.

-------

**1108)** திருப்பூர் மாநகராட்சியில் நான்கு மண்டலத்திலும் உள்ள பகுதிகளில் மிடுக்கான தோற்றத்தில் ( Smart City ) ஏரியாவாக உருவாக்க திருப்பூர் மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது.மேலும் ஸ்மார்சிட்டி பணிகளுக்கு முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் தினசரி விபரங்கள் சென்னை அனுப்புவதற்கும், எழுதுபொருட்கள் ஆறுமாதத்திற்கு கொள்முதல் செய்து கொள்ள உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ( ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) தேவைப்படுகிறது. திருப்பூர் ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் A & O E தொகையில் செலவினம் மேற்கொள்ளலாம்.

மேலும் அரசு அங்கீகாரம் பெற்ற திருப்பூர் நுகர்பொருள் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிட். கே.924, திருப்பூர் நிறுவனத்தில் கொள்முதல் செய்து கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**1108-ன் தொடர்ச்சி**

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதிக்கலாம். ஸ்மார்ட் சிட்டி விரிவாக்கப் பணிக்கு தேவையான எழுது பொருட்கள் திருப்பூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிட்., K.924 திருப்பூர் நிறுவனத்தில் கொள்முதல் செய்ய அனுமதிக்கலாம்.

( அ1/4560/2020)

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1109)** திருப்பூர் மாநகராட்சி அயற்பணி அடிப்படையில் துப்புரவு ஆய்வாளர்களாக பணிபுரிந்து வரும் திரு.ரா.தங்கமுத்து மற்றும் திரு க.கோகுலநாதன் ஆகியோரை திருப்பூர் மாநகராட்சியில் நிரந்தரமாக துப்புரவு ஆய்வாளர்களாக ஈர்த்துக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ள 19-08-2020ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந6) துறையின் 282ம் எண்ணிட்ட அரசாணை(ப)மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் பதிவு செய்யலாம். ( சி.1 / 0884 / 2020)

-------

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

-------

**1110)** திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் நிதி (2020-21)-ன் கீழ் (மாமன்ற தீர்மானம் எண்.1078, 1079, நாள்.21.07.2020) நிர்வாக அனுமதி பெறப்பட்ட மண்டலம்–I மற்றும் II-க்குட்பட்ட கீழ்க்கண்ட 6 பணிகளுக்கு 25.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி 25.08.2020 அன்று 6 பணிகளுக்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (மதிப்பீட்டு விலையை விட) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | 1, 2, 3, 4 & 5 | வார்டு எண்.1,2,3,4 மற்றும் 5ல் உள்ள 104 எண்ணிக்கையில் ஆழ்குழாய் கிணறு மின்மோட்டார்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல் பணிகளை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளுதல் (சிப்பம் எண்.01) **(மதிப்பீடு. ரூ. 27.50 இலட்சம்)** | M/s. கிருத்திகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | ரூ. 23,54,976 /- 0.16% குறைவு |
| | | | M/s. ஸ்ரீ சபரி எலக்ட்ரிக்கல்ஸ் & இன்ஜினியரிங் ஸ்டோர்ஸ் | ரூ. 23,89,920 /- 1.32% அதிகம் |
| 2. | 6, 7, 8, 9 & 10 | வார்டு எண்.6,7,8,9 மற்றும் 10ல் உள்ள 135 எண்ணிக்கையில் ஆழ்குழாய் கிணறு மின்மோட்டார்களை பழுது பார்த்தல் மற்றும் | திரு. M.பழனிச்சாமி | ரூ. 30,56,940 /- 0.16% குறைவு |

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (மதிப்பீட்டு விலையை விட) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | பராமரிப்பு செய்தல் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல் பணிகளை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளுதல் (சிப்பம் எண்.02) **(மதிப்பீடு. ரூ. 36.00 இலட்சம்)** | திரு. A.ஆறுச்சாமி | ரூ. 31,26,600 /- 2.12% அதிகம் |
| 3. | 11, 12, 13, 14 & 15 | வார்டு எண்.11,12,13,14 மற்றும் 15ல் உள்ள 195 எண்ணிக்கையில் ஆழ்குழாய் கிணறு மின்மோட்டார்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல் பணிகளை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளுதல் (சிப்பம் எண்.03) **(மதிப்பீடு. ரூ. 52.00 இலட்சம்)** | திரு. S.செல்வராஜ் | ரூ. 44,13,240 /- 0.21% குறைவு |
| | | | M/s. ஸ்ரீ சாயி அசோசியேட்ஸ் | ரூ. 44,97,480 /- 1.69% அதிகம் |
| 4. | 16, 17, 18, 19 & 20 | வார்டு எண்.16,17,18,19 மற்றும் 20ல் உள்ள 123 எண்ணிக்கையில் ஆழ்குழாய் கிணறு மின்மோட்டார்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல் பணிகளை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளுதல் (சிப்பம் எண்.04) **(மதிப்பீடு. ரூ. 32.30 இலட்சம்)** | திரு. V.அருணாசலம் | ரூ. 27,86,688 /- 0.11% குறைவு |
| | | | திரு. K.லோகநாதன் | ரூ. 27,97,020 /- 0.26% அதிகம் |
| 5. | 21, 22, 23, 24 & 25 | வார்டு எண்.21,22,23,24 மற்றும் 25ல் உள்ள 168 எண்ணிக்கையில் ஆழ்குழாய் கிணறு மின்மோட்டார்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல் பணிகளை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளுதல் (சிப்பம் எண்.05) **(மதிப்பீடு. ரூ. 43.15 இலட்சம்)** | திரு. K.லோகநாதன் | ரூ. 38,04,192 /- 0.16% குறைவு |
| | | | M/s. ஸ்ரீ அபிராமி இன்ஜினியரிங் | ரூ. 38,80,800 /- 1.85% அதிகம் |
| 6. | 26, 27, 28, 29 & 30 | வார்டு எண்.26,27,28,29 மற்றும் 30ல் உள்ள 88 எண்ணிக்கையில் ஆழ்குழாய் கிணறு மின்மோட்டார்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல் பணிகளை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளுதல் (சிப்பம் எண்.06) **(மதிப்பீடு. ரூ. 22.60 இலட்சம்)** | திரு. K.லோகநாதன் | ரூ. 19,93,728 /- 0.11% குறைவு |
| | | | M/s. ஸ்ரீ அபிராமி இன்ஜினியரிங் | ரூ. 20,01,120 /- 0.26% அதிகம் |

**1110–ன் தொடர்ச்சி**

மேற்படி 6 பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் முறையே ஒவ்வொரு பணிக்கும் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவாக குறிப்பிட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மாமன்றம் ஏற்கலாம்.
3) குடிநீர் அத்தியாவசிய பணியாக உள்ளதால் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம். **( ம.எண். 61 / N / 2020-21 )**

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

------

**1111)** நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை-5 அவர்களின் கடித எண்-8009/ ஜே1/ 2016, நாள்:28-03-2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் கடிதம், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்திரவு ந.க.எண். 554/2017/வி8 நாள்:18-06-2020-ன்படியும், திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பார்வையில் கண்டுள்ள உத்திரவில் 300 குடும்பங்களுக்கு ஒரு கொசுதடுப்பு பணியாளர் (DBC) வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டு பகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும் தற்போது டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல், பெறப்பட்டு ஆறு நாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணிபுரிய ஏதுவாக மண்டலம் ஒன்றிற்கு நாளொன்றுக்கு மண்டலம் 1ற்கு 50 நபர்கள், மண்டலம் 2ற்கு 50 நபர்கள், மண்டலம் 3ற்கு 50 நபர்கள் மற்றும் மண்டலம் 4ற்கு 50நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு தினசரி மொத்தம் 200 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொதுசுகாதார நலனை முன்னிட்டு 01-09-2020 முதல் 30-09-2020 வரையுள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் (நாள் ஒன்றுக்கு ஒரு நாளுக்கு ரூ.355/-) மகளிர் சுய உதவிக்குழு பணியாளர்கள் / இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.18.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**1111-ன் தொடர்ச்சி**

**அலுவலக குறிப்பு:**

1. செலவீனத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01-09-2020 முதல் 30-09-2020 வரையுள்ள காலத்திற்கு தினக்கூலி அடிப்படையில் தினசரி 200 DBC பணியாளர்களை பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(எச்1/ 2617 /2020)**

------------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1112)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1, வேலம்பாளையம் கிராமம் க.ச.எண். 319 / A1, 319 / A2-ல் அமைந்துள்ள 5.31 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்தேசித்து திரு. R.ஜோகேந்திரன் என்பவர் விண்ணப்பித்து இருந்ததின் பேரில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.2763/2020/TCP.3 நாள் 26-02-2020-ந் தேதிய கடிதத்தில், உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சாலை அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டது.

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள சாலை வடிவமைப்பு வரைபடத்தின்படி குடிநீர் பிரதானக் குழாய், மழைநீர் வடிகால், சிறுபாலம், தார்சாலை ஆகியவை மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள தரத்தில் மனுதாரரால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தெருவிளக்கு கம்பங்கள் அமைக்க ரூ.3,15,000/- மாநகராட்சிக்கு செலுத்து சீட்டு எண்.032/501/5/20-21/0001227 நாள் 13-07-2020-ல் செலுத்தப்பட்டு உள்ளது.

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ஒப்புதலளித்துள்ள சாலை வரைபடத்தின்படி, உத்தேச மனைப்பிரிவு சாலைகளை மாநகராட்சியின் பராமரிப்புக்கு தானமாக தானசாசன பத்திரம் எண்.3235/2020 நாள் 26-08-2020-ல் பதிவு செய்து வழங்கியுள்ளார். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இறுதி ஒப்புதல் வழங்கப்படும் வரைபடம்படி இறுதி அங்கீகாரம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

நகர் ஊரமைப்பு இயக்குநர் ஒப்புதல் அளித்துள்ள சாலை வடிவமைப்பு வரைபடத்தின்படி அமைக்கப்பட்டுள்ள சாலைகளை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு தானமாக ஏற்றுக் கொண்டும், நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் வழங்கப்படும் இறுதி ஒப்புதலின்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். (இ.1 / 5028 / 2019 / ம.1)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1113)** திருப்பூர் மத்திய அரிமா சங்கத்தினர் (Lions Club of Tiruppur Central) பல அரிய சேவை திட்டங்களை சிறப்புடன் செய்து வருகிறது என்றும் தற்போது மண்டலம் எண்.1, வார்டு எண்.9-ல் பெருமாநல்லூர் சாலையில் அமைந்துள்ள குமரன் பூங்காவினை செம்மைப்படுத்தி புனரமைத்து அதனை பொது மக்கள் பயன்பாட்டிற்கு

<u>**1113-ன் தொடர்ச்சி**</u>

அழகுற அமைத்து அதனை பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்து அனுமதி வழங்கும்படி கோரி கடிதம் வழங்கியுள்ளனர். எனவே மேற்படி குமரன் பூங்காவினை தன்னார்வ தொண்டு நிறுவனமான திருப்பூர் மத்திய அரிமா சங்கத்தினரிடம் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி புணரமைத்து பராமரித்துவர அனுமதி வழங்கலாம்.

1) குமரன் பூங்காவில் ஏற்படுத்தப்படும் அமைப்புகள் குறித்து விரிவான வரைபடம் தயாரித்து மாநகர பொறியாளரிடம் ஒப்புதல் பெற வேண்டும்.
2) மாநகராட்சி அனுமதியின்றி எந்த விளம்பரமும் செய்தல் கூடாது.
3) பொது நிகழ்ச்சிகள் ஏதும் மாநகராட்சி அனுமதியின்றி மேற்கொள்ளக் கூடாது.
4) பார்வையாளர்களிடம் கட்டணம் ஏதும் வசூலிக்கக் கூடாது.
5) பூங்காவில் உள்ள மின்சார இணைப்பினை பூங்கா பராமரிப்பு தவிர வேறு உபயோகங்களுக்கு பயன்படுத்தக் கூடாது.
6) பூங்காவினை ஒப்படைக்கும் நாளிலிருந்து மூன்று வருடங்களுங்கது பராமரிக்கும் அனுமதி வழங்கப்படும். அடுத்த மூன்று வருடங்களுக்கு அனுமதியினை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
7) மேற்கண்ட அனுமதியினை எந்தவொரு காரணத்திற்காகவும் ரத்து செய்ய மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு முழுஉரிமை உண்டு.

**அலுவலகக் குறிப்பு** :

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் திருப்பூர் மத்திய அரிமா சங்கத்தினருக்கு பூங்காவினை புணரமைத்து பராமரிக்க அனுமதி வழங்கலாம். (இ.1 / 3009 / 2020 / ம.1)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-------

**1114)** திருப்பூர் மாநகராட்சி நான்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.55,57-ல் உள்ள சில சொத்துவரி இனங்கள் பழைய பஞ்சாயத்து வார்டு கட்டிடமும் பழையது, வரி உயர்வின் போது பழைய வரி விதிப்பில் உயர்த்தாமல், பழைய கட்டிடத்தின் வரியை புதிய வரியாக விதிக்கப்பட்டுள்ளதால், ரூ.10,56,398/- வஜா செய்யவும், கேட்புத் தொகையை 2020-2021 வரை கணிணியிலிருந்து நீக்கம் செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம். ( அ.1 / 2211 / 2020 / ம.4)

------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

-------

**1115)** திருப்பூர் மாநகராட்சி - மண்டலம் எண்.4- வார்டு எண்.52, 53 மற்றும் 54-க்குட்பட்ட குப்பாண்டம்பாளையம் மற்றும் வீரபாண்டி நிலமட்டத் தொட்டியில் இருந்து சுமார் 12000 மக்கள் தொகை அடங்கிய பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வீரபாண்டி பிரிவு முதல் கேஸ் குடோன் வரை நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான தார்சாலையை அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. ஏற்கனவே சாலையின் ஓரத்தில் உள்ள குடிநீர் பகிர்மானக் குழாய் 2” -1320 மீ., 3” -2250மீ, 4” - 1494 மீ மற்றும் 6” - 1494 மீ, முற்றிலும் சேதமடைந்து மேற்கண்ட பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இதனை சீரமைக்க புதிய குடிநீர் பகிர்மானக் குழாய் பதிக்க

**1115-ன் தொடர்ச்சி**

ரூ.25,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேல்நடவடிக்கை எடுத்தமைக்கும் அனுமதி வழங்கலாம்.

**( இ.1 / 2631 / 2020 / ம.4)**

----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1116)** திருப்பூர் மாநகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-20-ன் கீழ் மண்டலம்–I மற்றும் II-ல் 5 பணிகளை மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டன. மேற்படி பணிகளுக்கு 17.07.2020 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து, 20.08.2020 அன்று மேற்படி 5 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி அனைத்துப் பணிகளுக்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (விலைக் குறைப்புக்குப் பின்) |
|---|---|---|---|---|---|
| | | | | (மதிப்பீட்டு விலையை விட) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | 27 | வார்டு எண்.27, திருநீலகண்டபுரம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டுதல் **(மதிப்பீடு.ரூ. 19.50 இலட்சம்)** | திரு. R.முத்துசாமி | ரூ.17,92,345/- 5.30% அதிகம். | ரூ.17,86,685/- 4.96% அதிகம். |
| | | | திரு. R.கிருஷ்ணன் | ரூ.18,33,590/- 7.72% அதிகம். | --- |
| 2. | 10 | வார்டு எண்.10, குமார் நகர் நகரவை மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டுதல் **(மதிப்பீடு.ரூ. 12.50 இலட்சம்)** | திரு. M.நித்தியானந்தன் | ரூ.11,29,279/- 5.24% அதிகம். | ரூ.11,26,044/- 4.94% அதிகம். |
| | | | திரு. K.ராஜேந்திரன் | ரூ.11,54,640/- 7.60% அதிகம். | --- |
| 3. | 8 | வார்டு எண்.08, கந்தசாமி லே-அவுட் மாநகராட்சி துவக்கப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டுதல் **(மதிப்பீடு.ரூ. 20.00 இலட்சம்)** | M/s. வி.எஸ்.எம். கன்ஸ்ட்ரக்சன் | ரூ.18,57,496/- 5.31% அதிகம். | ரூ.18,51,448/- 4.96% அதிகம். |
| | | | M/s. செந்தில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | ரூ.19,05,965/- 8.06% அதிகம். | --- |

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (விலைக் குறைப்புக்குப் பின்) |
|---|---|---|---|---|---|
| | | | | (மதிப்பீட்டு விலையை விட) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 4. | 14 | வார்டு எண்.14, சிறுபூலுவப்பட்டி மாநகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டுதல் | M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | ரூ.18,45,715/- 5.42% அதிகம். | ரூ.18,37,445/- 4.94% அதிகம். |
| | | **(மதிப்பீடு.ரூ. 19.95 இலட்சம்)** | M/s. சுதிக்ஷா கன்ஸ்ட்ரக்சன் | ரூ.18,78,810/- 7.31% அதிகம். | --- |
| 5. | 4 | வார்டு எண்.07, வெங்கமேடு மாநகராட்சி துவக்கப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டுதல் | திரு. S.ரஹமத்துல்லா | ரூ.12,57,548/- 5.37% அதிகம். | ரூ.12,52,646/- 4.95% அதிகம். |
| | | **(மதிப்பீடு.ரூ. 14.00 இலட்சம்)** | திரு. K.ராஜேந்திரன் | ரூ.12,85,817/- 7.73% அதிகம். | --- |

விலைக்குறைப்புக்குப் பின் மதிப்பீட்டு விலையை விட 5.00%-க்குள் அதிகமாக உள்ள கலம் எண்-6ல் கண்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மேற்படி பணிகள் திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 5.00%-க்குள் அதிகமாக உள்ள கலம் எண்-6ல் கண்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை மாமன்றம் ஏற்கலாம்.

2) திட்டப்பணியாக உள்ளதால் பணியன் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் ஏற்கலாம்.

----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.